சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி
முன்னிலை: **திரு. M.மணிகண்டன், M.A., M.L., PG.D. C.F.Sc.,**
சார்பு நீதிபதி, பொள்ளாச்சி

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
(2056 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் மாசி திங்கள் 22 ம் நாள்)

**அசல் வழக்கு எண்: 75/2021**
**TNCB11-000255-2021**

T.ராஜமாணிக்கம் ...வாதி

/எதிராக/

1. G.சகுந்தலா
2. சங்கீதா
3. ஐஸ்வர்யா ...பிரதிவாதிகள்

இவ்வழக்கில் வாதிக்காக அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.G.A.அதிபதி, பி.எஸ்சி. பி.எல்., அவர்கள் ஆஜராகியும், 1ம் பிரதிவாதி தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ள நிலையிலும், 2, 3 பிரதிவாதிகளுக்காக அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.E.N.துரை, பி.ஏ., பி.எல்., அவர்கள் ஆஜராகியும் பின்னிட்டு இறுதியாக 23.02.2026ம் நாள் என் முன்பாக வரப்பட்டு என்னால் கேட்கப்பட்டு இன்று வரை பரிசீலனையிலிருந்து இந்நீதிமன்றத்தில் பின்வருமாறு தீர்ப்புரை வழங்கப்படும்...

## தீர்ப்புரை

வாதிக்கு பிரதிவாதிகளிடமிருந்து தாவா அசல் தொகையான ரூ.6,11,200/- ஐ செலுத்த வேண்டும் என்றும், அசல் தொகை ரூ.5,00,000/-க்கு தாவா தாக்கல் செய்த நாள் முதல் தொகை முழுவதும் செல்லாகும் நாள் வரை 9 சதவீத பின்வட்டி கணக்கிட்டு செலுத்தக்கோரியும், மேற்படி தொகை செல்லாகும் வரை தாவா சொத்துக்களின் பேரில் பொறுப்புறுதி (Charge over the property) ஏற்படுத்த உத்தரவிடக்கோரியும் மற்றும் தாவா செலவுத்தொகை கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **வாதியின் வழக்குரை சாரம்சம் :**

கடந்த 28.10.2018 ம் தேதியன்று வாதியிடம், K.G.முருகானந்தம் கடனாக ரூ.5,00,000/—த்தைப் பெற்றுக்கொண்டு மேற்படி தொகைக்கு மாதம் 12 சதவீத வட்டியுடன் சேர்த்து செலுத்துவதாக ஒப்புக்கொண்டு 28.10.2018 ம் தேதியிட்ட பிராமிசரி நோட்டை எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், பிரமிசரி நோட்டின்படி K.G.முருகானந்தம், வாதிக்கு எந்த தொகையையும் செலுத்தவில்லை என்றும், இந்நிலையில் கடந்த 08.11.2018 ம் தேதியன்று K.G.முருகானந்தம் பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்றும், அதனால் வாதி, பிரதிவாதிகளை பலமுறை நேரில் அணுகி கேட்டபோது பிரதிவாதிகள் எவ்வித தொகையையும் செலுத்தவில்லை என்றும், பிரதிவாதிகள் இறந்துபோன K.G.முருகானந்தனின் சொத்துக்களை அடைந்து அனுபவம் செய்து வரும் நிலையில் அவர்கள் மேற்படி கடன் தொகையை செலுத்த கடமைப்பட்டவர்கள் என்றும், ஆனால் பிரதிவாதிகள் மேற்படி தொகையை செலுத்தாத காரணத்தினால் வாதி அவரது வழக்கறிஞர் மூலம் கடந்த 21.12.2020 ம் தேதியன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றும், மேற்படி அறிவிப்பினை 1 ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டார் என்றும், 2, 3 பிரதிவாதிகள் மேற்படி அறிவிப்பினை பெற்றுக்கொள்ளா மறுத்துவிட்டனர் என்றும், அதனால் கடனுறுதிச் சீட்டின்படி செல்லாக வேண்டிய அசல் வட்டி தொகைகள் கிடைக்கும்படி உத்தரவிட வேண்டும் என்று தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **2, 3 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படும் எதிர்வழக்குரை சாரம்சம்**

வாதியின் தாவா பொய்யும் மோசடியுமானது ஆகும். சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. பிரதிவாதி ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர பிற சங்கதிகளை வாதியே நிரூபிக்க வேண்டும். வாதியும், 1 ம் பிரதிவாதியும் நய வஞ்சக கூட்டு சேர்ந்து கொண்டு இந்த பிரதிவாதிகளின் சொத்தை

அபகரிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்துடன் போர்ஜரியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணத்தை வைத்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், கடனுறுதிச் சீட்டு இறந்துபோன K.G.முருகானந்தம் என்பவரால் எழுதிக்கொடுக்கப்பட்டதல்ல என்றும், வெளிக் கடன்களை பெற வேண்டிய அவசியமும் K.G.முருகானந்தனுக்கு ஏற்பட்டதுமில்லை என்றும், ஏனெனில் K.G.முருகானந்தம் டெல்லியில் சோலார் கம்பெனியில் டெபுடி ஜெனரல் மேனேஜராக பணிபுரிந்து மாதம் ரூ.2,50,000/– சம்பளமாக பெற்று டெல்லியிலேயே இருந்து வந்தார் என்றும், மேலும் மேற்படி தென்னந்தோப்பிலிருந்து வருகின்ற வருமானத்தையும், 2ம் பிரதிவாதி அரசு பள்ளியில் ஆசிரியையாக பணியாற்றி அதன் மூலம் பெற்று வந்த வருமானம் ரூ.75,000/–மும் மொத்த குடும்ப வருமானமாக இருக்கின்ற போது இறந்துபோன K.G.முருகானந்தம் எந்த விதத்திலும் கடன் பெற வேண்டிய அவசியம் இல்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

3.2) வழக்குரையில் சொத்து விவரத்தில் கூறியுள்ள விவரங்கள் தவறானவை என்றும், முழுமையான சொத்து விவரம் குறிப்பிடாத நிலையில் சொத்துக்களை முன் ஜப்தி செய்ய கோரியுள்ளது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், முன் ஜப்தி கோரியுள்ள சொத்துக்கள் யாதொரு எல்லையும் குறிப்பிடாமலும், சரியான அளவுகள் இல்லா நிலையிலும் முன் ஜப்தி மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், தாவா சொத்து ஒரு கோடி ரூபாய்க்கு மேல் மதிப்பு பெறும் என்றும், கோரியுள்ள பரிகாரம் சிறிது என்கிற நிலையில் பெரிய விலை உயர்ந்த பூமியை முன் ஜப்தி கோருவது பிரதிவாதிகளை பழி தீர்க்க வேண்டும் என்ற காரணத்திற்காக வாதியும், 1ம் பிரதிவாதியும் கூட்டு சேர்ந்து போர்ஜரியாக ஆவணத்தை தயாரித்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், வழக்குரையில் ஜப்தி கோரியுள்ள சொத்தை பொறுத்து பாகப் பிரிவினை கோரி அ.வ.எண்.160/2021 என்ற எண்ணில் தொடர்ந்த வழக்கை 1ம் பிரதிவாதி

தொடர்ந்து நடத்தி வருகிறார் என்றும், மேற்படி K.G.முருகானந்தம் தான் இறப்பதற்கு முன்பு அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து ஒரு பதிவு செய்யாத உயில் சாசனத்தை கடந்த 16.05.2018 ம் தேதியன்று எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், K.G.முருகானந்தத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அனைத்து 3 ம் பிரதிவாதிக்கு சேரத்தக்கது என்றும், சொத்தை தட்டிப் பறிக்க வேண்டுமென்ற காரணத்தினால் வாதியும், 1 ம் பிரதிவாதியும் வஞ்சக கூட்டு சேர்ந்து இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளனர் என்றும், 3 ம் பிரதிவாதிக்கு சொந்தமான பூமியில் அத்துமீறி உட்புகுந்து தோப்பில் போட்டு வைத்திருந்த சுமார் 5000 தேங்காய்களை வட்டிக்காக வேண்டி எடுத்து செல்கிறேன் என்று கூறி திருடிச் சென்றுள்ளார் என்றும், அதைப் பொருத்து பொள்ளாச்சி தாலூக்கா காவல் நிலையத்தில் வாதி மீது புகார் அளிக்கப்பட்டது என்றும், எனவே, வாதியின் வழக்கினை தள்ளுபடி செய்யவேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது.

4) <u>**2, 3 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படும் கூடுதல் எதிர்வழக்குரை சாரம்சம்**</u>

புகார் சம்பந்தமாக காவல் நிலையத்தில் விசாரணையின் போது 2 ம் பிரதிவாதி தன் கணவருக்கு கடன் வாங்க வேண்டிய நிலைமை இல்லை என்றும், கடன் வாங்கியதாக கூறுவது பொய் என்றும், கடன் வாங்கியதற்கு ஆதாரம் இருந்தால் கொடுங்கள் என்று கேட்டபோது வாதி, 2 ம் பிரதிவாதியின் கணவர் கையெழுத்து செய்து பூர்த்தி செய்யப்படாத இரண்டு பிராமிசரி நோட்டுக்களின் புகைப்பட நகலை 2 ம் பிரதிவாதி வசம் கொடுத்துள்ளார் என்றும், வாதி கொடுத்த பிராமிசரி நோட்டில் 2018 ம் வருடம் ஜீலை மாதம் என்றும், மற்றொரு பிராமிசரி நோட்டில் 2018 ம் வருடம் அக்டோபர் மாதம் 28 ம் தேதி என்று பூர்த்தி செய்யப்பட்டு 2 ம் பிரதிவாதியின் கணவரின் விலாசம் மட்டும் எழுதப்பட்டு தொகை எதுவும் பூர்த்தி செய்யப்படாமல் இருந்தது என்றும், இரண்டு

புரோநோட்டுகளில் ஒன்றான 28.10.2018ம் தேதியிட்ட பிராமிசரி நோட்டை ரூ.5,00,000/–த்திற்கு பூர்த்தி செய்து வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே வழக்கினை தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

5) **<u>இவ்வழக்கை தீர்வு காண கீழ்க்கண்டவாறு வனையப்பட்ட எழுவினாக்கள் :–</u>**

1) Whether the plaintiff is entitled for recovery of money as prayed for ?

3) To what other relief ?

6) வாதி தரப்பில் வா.சா.1 மற்றும் வா.சா.ஆ.2 விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1 விசாரிக்கப்பட்டு, பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7) **<u>எழுவினா 1 –க்கான தீர்வு</u>**

7.1) இவ்வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையை இந்த நீதிமன்றம் பரிசீலனை செய்யும்போது வாதியிடம் இறந்துபோன முருகானந்தம் ரூ.5,00,000/–த்தை 28.10.2018ம் தேதியன்று அவருடைய வியாபார செலவிற்காக கடன்பெற்றிருந்தார் என்றும், அந்த தொகைக்கு 12% வட்டியுடன் சேர்த்து கொடுப்பதாக கூறியிருந்தார் என்றும், பின்னிட்டு இறந்துபோன முருகானந்தம் வாங்கிய தொகைக்கு அசலையோ, வட்டியையோ திரும்ப செலுத்தவில்லை என்றும், பின்னிட்டு 08.11.2018ம் தேதியன்று முருகானந்தம் இறந்துவிட்டார் என்றும், இந்த வழக்கில் கண்ட பிரதிவாதிகள், முருகானந்ததின் வாரிசுகள் என்றும், பிரதிவாதிகள், முருகானந்தம் பெற்ற கடன் பணத்தை பற்றி தெரிந்தும் அந்த பணத்தை கொடுக்கவில்லை என்றும், பிரதிவாதிகள், இறந்துபோன முருகானந்தத்தின் சொத்தை அடைந்துள்ள காரணத்தினால் அவர்கள் வாதிக்கு பிராமிசரி நோட்டில் கண்ட தொகையை கொடுக்கவேண்டுமென்று பிரதிவாதிகளிடம், வாதி பலமுறை கேட்டும் கொடுக்காத காரணத்தினால் 21.12.2020ம் தேதியன்று பிரதிவாதிகளுக்கு, வாதி

வழக்கறிஞர் அறிவிப்பினை அனுப்பியுள்ளார் என்றும், அதனை 1ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டார் என்றும், 2, 3 பிரதிவாதிகள் பெற்றுக்கொள்ளவில்லை என்றும், இறந்துபோன முருகானந்தம் வாங்கிய பணத்தை கொடுக்காததால் அவரது வாரிசுகள் மீது இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளதாக வழக்குரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7.2) அதற்கு பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்து வழக்குரையில் கண்ட சங்கதிகளை முற்றிலும் மறுத்து வாதியும், 1ம் பிரதிவாதியும் நய வஞ்சக கூட்டு சேர்ந்து கொண்டு இந்த பிரதிவாதிகளின் சொத்தை அபகரிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்துடன் போர்ஜரியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணத்தை வைத்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், பிராமிசரி நோட் இறந்துபோன K.G.முருகானந்தம் என்பவரால் எழுதிக்கொடுக்கப்பட்டதல்ல என்றும், வெளிக் கடன்களை பெற வேண்டிய அவசியமும் K.G.முருகானந்தனுக்கு ஏற்பட்டதுமில்லை என்றும், ஏனெனில் K.G.முருகானந்தம் டெல்லியில் சோலார் கம்பெனியில் டெபுடி ஜெனரல் மேனேஜராக பணிபுரிந்து மாதம் ரூ.2,50,000/– சம்பளமாக பெற்று டெல்லியிலேயே இருந்து வந்தார் என்றும், மேலும் மேற்படி தென்னந்தோப்பிலிருந்து வருகின்ற வருமானத்தையும், 2ம் பிரதிவாதி அரசு பள்ளியில் ஆசிரியையாக பணியாற்றி அதன் மூலம் பெற்று வந்த வருமானம் ரூ.75,000/–மும் மொத்த குடும்ப வருமானமாக இருக்கின்ற போது இறந்துபோன K.G.முருகானந்தம் எந்த விதத்திலும் கடன் பெற வேண்டிய அவசியம் இல்லை என்றும், மேற்படி K.G.முருகானந்தம் தான் இறப்பதற்கு முன்பு அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து ஒரு பதிவு செய்யாத உயில் சாசனத்தை கடந்த 16.05.2018ம் தேதியன்று எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், K.G.முருகானந்தத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அனைத்து 3ம் பிரதிவாதிக்கு சேரத்தக்கது என்றும், சொத்தை தட்டிப் பறிக்க வேண்டுமென்ற

காரணத்தினால் வாதியும், 1ம் பிரதிவாதியும் வஞ்சக கூட்டு சேர்ந்து இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளனர் என்றும், 3ம் பிரதிவாதிக்கு சொந்தமான பூமியில் அத்துமீறி உட்புகுந்து தோப்பில் போட்டு வைத்திருந்த சுமார் 5000 தேங்காய்களை வட்டிக்காக வேண்டி எடுத்து செல்கிறேன் என்று கூறி திருடிச் சென்றுள்ளார் என்றும், அதைப் பொருத்து பொள்ளாச்சி தாலூக்கா காவல் நிலையத்தில் வாதி மீது புகார் அளிக்கப்பட்டது என்றும், எனவே, வாதியின் வழக்கினை தள்ளுபடி செய்யவேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது.

7.3) இந்த நிலையில் வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியங்களின் சாட்சியத்தை பரிசீலனை செய்யும்போது வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவருடைய சாட்சியத்தில் 1ம் பிரதிவாதி பிராமிசரி நோட்டை எழுதிக்கொடுத்த முருகானந்ததின் தாயார் என்றால் சரிதான் என்றும், 2ம் பிரதிவாதி முருகானந்ததின் மனைவி என்று சொன்னாலும், 3ம் பிரதிவாதி முருகானந்தத்தின் மகள் என்று சொன்னால் சரிதான் என்றும், முருகானந்தத்தின் சகோதரர் முரளிக்குமார் தனக்கு நண்பர் என்று சொன்னால் சரிதான் என்றும், முருகானந்தத்தை தனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு 2, 3 வருடத்திற்கு முன்பிருந்து தெரியும் என்றும், முருகானந்தம் டெல்லியில் சோலார் கம்பெனியில் GM ஆக இருந்து மாதம் ரூ.2,50,000/- சம்பாதித்து வந்தார் என்றால் அது பற்றி தனக்கு தெரியாது என்றும், 2ம் எதிர்மனுதாரர் அரசு பள்ளியில் ஆசிரியராக வேலை செய்து வந்தார் என்றால் சரிதான் என்றும், சம்பளம் ரூ.1,00,000/- வாங்கி வந்தார் என்று சொன்னால் அது பற்றி தனக்கு தெரியாது என்றும், புரோ நோட் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் அது பற்றி தனக்கு தெரியாது என்றும், யார் எழுதி கொடுத்தார்கள் என்றால் முருகானந்தமும், முரளிக்குமாரும் எழுதிக்கொடுத்தார்கள் என்றும், யார் யார் சாட்சி கையெழுத்து செய்தார்கள் என்றால் முரளிக்குமாரும், அர்ஜீன் ராஜ் ஆகியோர் சாட்சி கையெழுத்து

செய்தார்கள் என்றும், உண்மையிலேயே பிராமிசரி நோட் எழுதிக்கொடுத்திருந்தால் 2 1/2 வருடங்கள் கழித்து 21.12.2020 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்திருக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் அந்த காலக்கட்டத்தில் பலமுறை பஞ்சாயத்து நடந்தது என்றும், எத்தனை தடவை முருகானந்தத்தின் தோட்டத்திற்கு சென்று தேங்காய் போட்டேன் என்று கேட்டால் 2 முறை சென்று தேங்காய் போட்டேன் என்றும், 2வது முறை தேங்காய் போட்டதற்கு எவ்வளவு கிடைத்தது என்று கேட்டால் 600 காய்களுக்கு ரூ.3,000/- கிடைத்தது என்றும், பிராமிசரி நோட்டில் எழுதுவதற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் அடித்தல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் என்றும், எதற்காக பணம் கொடுக்கப்படுகிறது என்ற இடத்தில் முகவரி எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான் என்றும், பிராமிசரி நோட்டில் கண்ட விவரங்களை முருகானந்தமும் அவரது அண்ணனும் எழுதிக்கொண்டார்கள் என்றும், பூர்த்தி செய்யப்படாத பிராமிசரி நோட்டின் நகலை ஒரு பொன்னுச்சாமியிடம் கொடுத்தேன் என்றும், பூர்த்தி செய்யப்படாத பொன்னுசாமியிடம் கொடுத்த புகைப்பட காப்பியின் அசலை தான் பூர்த்தி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துவிட்டேன் என்றால் சரியல்ல என்றும், தான், முரளி, அர்ஜீனன், 1ம் பிரதிவாதி ஆகியோர் கூட்டு சேர்ந்து பிராமிசரி நோட்டை தயாரித்து வழக்கு தாக்கல் செய்துவிட்டோம் என்றால் சரியல்ல என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

7.4) பின்னிட்டு வா.சா.2 ஆக பிராமிசரி நோட்டில் கண்ட சாட்சியான அர்ஜீனன் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தன்னுடைய சாட்சியத்தில் யார் புரோநோட்டை எழுதியது என கேட்டால் முருகானந்தத்தின் சகோதரர் முரளிக்குமார் எழுதினார் என்றும், சாட்சி கையெழுத்து போடும்போது புரோநோட்டில் அடித்தல் திருத்தல் இருந்ததா என்றால் அது பற்றி தனக்கு சரியாக ஞாபகமில்லை என்றும், புரோட் எழுதுவதற்கு தேவையான பொருட்களை யார் வாங்கி வந்தார்கள் என கேட்டால் முருகானந்தம் வாங்கி

வந்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

7.5) பின்னிட்டு பி.வா.சா.1 ஆக சங்கீதா விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தன்னுடைய சாட்சியத்தில் தனக்கும் இறந்துபோன முருகானந்தத்திற்கும் 1993 ல் திருமணம் நடந்தது என்றால் சரிதான் என்றும், தன்னிடம் காட்டப்படும் பிராமிசரி நோட்டில் கண்ட தன்னுடைய கணவரின் கையெழுத்தா என்றால் இல்லை என்றும், தனது கணவர் இறுதியாக 2 1/2 லட்சம் வாங்கி வந்தார் என்றும், அதனால் அவருக்கு பிராமிசரி நோட்டின்படி கடன் வாங்க அவசியம் இல்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

7.6) இந்த நிலையில் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்களையும் இருதரப்பு சாட்சிகளையும் இந்த நீதிமன்றம் கவனமாக பரிசீலனை செய்யும்போது வா.சா.ஆ.1 ஆக 28.10.2018 ம் தேதியிட்ட பிராமிசரி நோட் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனை இந்த நீதிமன்றம் பரிசீலனை செய்யும்போது பிராமிசரி நோட்டில் யாருக்கு எழுதிக்கொடுக்கப்படும் என்ற இடத்தில் K.G.முருகானந் என குறிப்பிடப்பட்டு பின்னிட்டு அடித்தல்கள் செய்யப்பட்டுள்ளது என்றும், பின்னிட்டு பிரிண்டடு பிராமிசரி நோட்டில் வாசகங்கள் எழுதப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. மேலும் பிராமிசரி நோட்டிற்கான வருவாய்துறை முத்திரைகள் மீது கையெழுத்து இடப்பட்டு சாட்சிகள் கண்டும், எழுதிய சாட்சி கண்டும் எழுதப்பட்டுள்ளது என்பது இந்த நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும் இந்த வழக்கில் பிராமிசரி நோட்டை நிரூபணம் செய்ய பிராமிசரி நோட்டில் கண்ட அர்ஜீனன் விசாரிக்கப்பட்டு அவர் தெளிவாக பிராமிசரி நோட்டை பொறுத்து தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளார் என்றும், ஆகவே இந்த வழக்கில் வாதி தரப்பில் பிராமிசரி நோட்டை தாக்கல் செய்தும், அதில் கண்ட சாட்சியை விசாரித்தும் எடுத்துக்காட்டியுள்ள நிலையில் அனுமானது வாதிக்கு சாதகமாக உள்ளது (The presumption is in favour of plaintiff).

7.7) மேலும் பிரிவு 118 மாற்றுமுறை ஆவண சட்டத்தை பரிசீலனை செய்யும்போது அது Presumption as to consideration for negotiable instrument என கண்டுள்ளது. ஆகவே இந்த வழக்கில் பிராமிசரி நோட்டை தாக்கல் செய்து அதில் கண்ட சாட்சி விசாரிக்கப்பட்டுள்ள நிலையில் ஆனால் பிரதிவாதிகள் தரப்பில் பிராமிசரி நோட்டில் கண்ட கையெழுத்து இறந்துபோன முருகானந்தத்தின் கையெழுத்து அல்ல என்றும், பிராமிசரி நோட் மோசடியாக பெறப்பட்டுள்ளது என்றும் கூறும் நிலையில் அதனை மெய்ப்பிக்கும் சுமை (Burden of Proof) பிரதிவாதிகளுக்கு மாறி செல்கிறது. ஆகவே பிரதிவாதிகள் தாவா பிராமிசரி நோட் மோசடியானது என்றும், அதில் உள்ள கையெழுத்து முருகானந்தத்தின் கையெழுத்தல்ல என்றும் இந்த நீதிமன்றத்திற்கு எடுத்துக்காட்டவேண்டும். ஆனால் இந்த வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் பிராமிசரி நோட்டில் உள்ள கையெழுத்து இறந்துபோன முருகானந்தத்தின் கையெழுத்தல்ல என்பதை பொறுத்து கையெழுத்து நிபுணரை விசாரிக்கவோ, முருகானந்தம் கையெழுத்து செய்து கொடுத்த ஆவணங்களை தாக்கல் செய்து பிராமிசரி நோட்டில் உள்ள கையெழுத்தையும், முருகானந்தத்தின் கையெழுத்தையும் ஒப்பீடு செய்ய எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், பிராமிசரி நோட்டில் திருத்தல் உள்ளது என்ற நிலையில் பிராமிசரி நோட் மோசடியாக பெறப்பட்டுள்ளதாக கூறும் நிலையில் அதனைப் பொறுத்து பிரதிவாதிகள் தான் நிரூபணம் செய்யவேண்டுமென்ற நிலையில் ஆனால் பிரதிவாதிகள் தரப்பில் தகுந்த சாட்சிகள் மற்றும் கையெழுத்து நிபுணரை விசாரித்து முருகானந்தம் பிராமிசரி நோட்டில் கையெழுத்து இடவில்லை என்பதை நிரூபணம் செய்ய எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது தெரியவருகிறது.

7.8) மேலும் வாதி தரப்பில் தாவா பிராமிசரி நோட்டில் கண்ட சாட்சி விசாரிக்கப்பட்டு வாதிக்கு சார்பாக அனுமானம் உள்ள நிலையில் பிரதிவாதிகள் தரப்பில் தாவா பிராமிசரி நோட் மோசடியானது என்றும் கூறும்நிலையில்

**பிராமிசரி நோட்டில் உள்ள கையெழுத்து இறந்துபோன முருகானந்தத்தின் கையெழுத்தல்ல என்று கூறும் நிலையில் அதனை நிரூபணம் செய்ய எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது தெரியவருகிறது. அதனைப் பொறுத்து இந்த நீதிமன்றம் முன்தீர்ப்புகளை பரிசீலனை செய்யும்போது S.Thangapandi Vs S.Ganesn, AS (MD) No.299/2021 MHC அதில்** In a promissory note suit, the initial burden lies on the plaintiff to prove exectuion. Once execution is proved, presumption under Section 118 of the Negotiable Instruments Act arises. Thereafter burden shifts to the defendant to rebut the presumption. Mere denial of signature is not sufficient to rebut the presumption **என்று தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.**

**மேலும் Pavayammal Vs R.Venugopalan AS No.4/2024 MHC என்ற முன்தீர்ப்பை பரிசீலனை செய்யும்போது I**f the defendants alleged forgery but did not sent the promissory note for expert opinion. Failure of defendant to take steps to prove forgery is fatal to defence **என்று தெளிவாக கண்டுள்ளது.**

**மேலும் K.Sethurathinam Vs K.Subramanian 2002 (4) CTC 232 MHC என்ற தீர்ப்பை பரிசீலனை செய்யும்போது** plaintiff must first prove execution of promissory note. If execution proved, presumption under Section 118 arises. Defendant must rebut by acceptable evidence **என்று கண்டுள்ளது.**

**ஆனால் இந்த வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் பிராமிசரி நோட் மோசடியாக பெறப்பட்டுள்ளது என்று கூறும் நிலையில் அதனைப் பொறுத்து பிரதிவாதிகள் தரப்பில் நிரூபித்துக் காட்ட எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், மேலும் Bharat Barrel & Drum Manufacturing Corporation Vs Amin chand Pyarelal (1999) 3 SCC 35 (SC) என்ற முன்தீர்ப்பில்** Once execution of promissory not is proved. Presumption of consideration arises under Section 118 of Negotiable Instrument Act **என்று தெளிவாக கண்டுள்ளது. அவ்வாறான நிலையில் மெய்ப்பிக்கும் சுமை பிரதிவாதிகளுக்கு மாறிகின்ற நிலையில் பிரதிவாதிகள்**

தரப்பில் எடுத்த எதிர்வாதத்தினைப் பொறுத்து நிரூபணம் செய்ய எவ்வித முயற்சியும் மேற்கொள்ளவில்லை. ஆகவே இந்த வழக்கில் வாதி தரப்பில் தாவா பிராமிசரி நோட்டை தாக்கல் செய்தும் அதில் கண்ட சாட்சியை விசாரித்தும் வாதி தரப்பில் பிராமிசரி நோட்டை பொறுத்து எடுத்துக்காட்டியுள்ள நிலையில் இந்த வழக்கில் வாதிக்கு சார்பாக அனுமானம் உள்ள நிலையில் பிரதிவாதிகள் தரப்பில் தாவா பிராமிசரி நோட்டில் உள்ள கையெழுத்து முருகானந்தத்தின் கையெழுத்தல்ல என்பதை பொறுத்தும், மோசடி செய்யப்பட்டுள்ளது என்பதை பொறுத்தும் நிரூபணம் செய்ய எவ்வித நடவடிக்கையும் எடுக்காத நிலையில் பிரதிவாதிகள் தரப்பில் எடுக்கப்பட்ட கட்சியை நிரூபணம் செய்ய தவறிவிட்டார்கள் (fails to rebut the statutory presumption) என்று தான் எடுத்துக்கொள்ளவேண்டும். ஆகவே வாதி தரப்பில் இந்த வழக்கில் கண்ட பிராமிசரி நோட் எடுத்துக்காட்டப்பட்டுள்ள நிலையல் வாதி கோரிய பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றும் இந்த நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

**8) எழுவினா 2–க்கான தீர்வு**

எழுவினா 1 க்கு தீர்வு கண்டுள்ள நிலையில் 2 ம் எழுவினாவிற்கு தனியாக தீர்வு காணத் தேவையில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

ஆகவே, **முடிவாக**, வழக்கு பகுதியாக அனுமதிக்கப்பட்டு, வாதிக்கு, பிரதிவாதிகள் தாவா தொகையான ரூ.6,11,200/– கொடுக்க வேண்டும் என்றும், மேலும் அசல் தொகையான ரூ.5,00,000/– க்கு தாவா தாக்கல் செய்த தேதி முதல் தீர்ப்பாணை தேதி வரையில் 12% வட்டி சேர்த்து கொடுக்க வேண்டும் என்றும், தீர்ப்பாணை தேதியிலிருந்து தொகை முழுவதும் செலுத்தும் வரை 6% பின்வட்டி சேர்த்து கொடுக்க வேண்டும் என்றும், மேற்படி தொகை செல்லாகும் வரை பொறுப்புறுதி (Charge over the property) பரிகாரமும் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றும், செலவுத் தொகையுடன் அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, பின்னர் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 06ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

M MANIKANDAN Digitally signed by M MANIKANDAN Date: 2026.03.06 18:15:02 +0530

சார்பு நீதிபதி, பொள்ளாச்சி

<u>வாதி தரப்பு சாட்சி:</u>

வா.சா.1 – ராஜமாணிக்கம்
வா.சா.2 – அர்ஜீனன்

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:</u>

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 28.10.2018 | பிராமிசரி நோட் | அசல் |
| வா.சா.ஆ.2 | 21.12.2020 | வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.3 | 29.12.2020 | அஞ்சலக ஒப்புகை அட்டை | அசல் |
| வா.சா.ஆ.4 | 29.12.2020 | திருப்பப்பட்ட அஞ்சலக உறை | அசல் |
| வா.சா.ஆ.5 | 29.12.2020 | திருப்பப்பட்ட அஞ்சலக உறை | அசல் |
| வா.சா.ஆ.6 | 17.10.2019 | முருகானந்தம் என்பவரின் வாரிசு சான்று | நகல் |

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி:</u>

பி.வா.சா.1 – சங்கீதா

<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:</u>

| | | | |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 01.07.2022 | புகார் மனு | நகல் |
| பி.வா.சா.ஆ.2 | 02.07.2022 | புகார் ஏற்பு ரசீது | நகல் |

M MANIKANDAN Digitally signed by M MANIKANDAN Date: 2026.03.06 18:15:09 +0530

சார்பு நீதிபதி, பொள்ளாச்சி

**<u>வரைவு / சீரான தீர்ப்புரை</u>**

அ.வ.எண். 75/2021

06.03.2026